வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி : 13.03.2026 நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அசாமில், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

நடப்பு நிதியாண்டிற்கான 2ஆம் தொகுப்பு துணை மானியக் கோரிக்கைகள் இன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டன.

எல்பிஜி வினியோக நிலவரங்களால், விருந்தோம்பல் துறையில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து, மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் இன்று, பெட்ரோலியத் துறை அமைச்சரை சந்தித்து பேசியுள்ளார்.

புதுச்சேரி உள்ளாட்சி அமைப்புகளில் ஓபிசி இடஒதுக்கீடு குறித்து, அரசால் அமைக்கப்பட்ட ஒருநபர் ஆணையம், தனது பரிந்துரைகளை, அரசிடம் சமர்பித்துள்ளது.

-----------------------------------

*மோடி பயணம்* 1 (18)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை குவஹாத்தியில், மொத்தம் 19 ஆயிரத்து 680 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். 150 மெகாவாட் கொப்பிலி நீர்மின்சார திட்டமும் இதில் அடங்கும். பிஎம்-கிசான் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 9.3 கோடி விவசாயிகளுக்கு, 22ஆம் தவணை நிதி உதவி வழங்கும் பணிகளையும், குவஹாத்தியில் பிரதமர் தொடக்கி வைத்தார்.

முன்னதாக பிரதமர் இன்று பிற்பகல், அசாம் மாநிலம் கோக்ராஜாருக்கு மேற்கொள்வதாக இருந்த பயணம், சாதகமற்ற வானிலை காரணமாக ரத்து செய்யப்பட்டது. பின்னர் பிரதமர் திரு. நரேந்திர மோடி, குவஹாத்தி அரசு விருந்தினர் மாளிகையில் இருந்தே, மெய்நிகர் முறையில், கோக்ராஜார் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். மொத்தம் 4 ஆயிரத்து 570 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

அசாமில் நீண்டகாலமாக வன்முறையால் பாதிக்கப்பட்டு இருந்து போடோ பிராந்தியம், தற்போது வளர்ச்சி, மற்றும், ஸ்திரத் தன்மையின் புதிய யுகத்தில் அடியெடுத்து வைத்து இருப்பதாக, பிரதமர் தமது உரையில் கூறினார். போடோ பிராந்தியத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள்,

*மோடி பயணம் 2 (10)*

ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு, தேசிய நீரோட்டத்தில் இணைந்து வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இன்று, கோக்ராஜார் விழாவில், பிரதமர் அடிக்கல நாட்டிய திட்டங்களில், சாலை மேம்பாட்டிற்கான, 3ஆம் கட்ட அசாம் மாலா திட்டமும், கோக்ராஜாரில், ரயில்வே பணிமனை அமைக்கும் திட்டமும் அடங்கும். காமாக்யா-சர்லபள்ளி அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் உட்பட, 3 புதிய ரயில்களை அவர் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

நாளைய தினம், அசாம் மாநிலம் சில்சாரில், மொத்தம் 23 ஆயிரத்து 550 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------------

*மக்களவை 1 (4)*

2025-26ஆம் ஆண்டிற்கான 2ஆம் தொகுப்பு துணை மானியக் கோரிக்கைகள் இன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டு, மொத்தம் 2 லட்சத்து 81 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவினங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்.....

**(வாய்ஸ்)**

*மக்களவை 2* (13)

**(வாய்ஸ்)**

துணை மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப் படுவதால், உணவு மானியம், உர மானியம் உள்ளிட்ட இனங்களில், கூடுதல் செலவுகளை சமாளிக்க, அரசுக்கு ஏதுவாகும் என்று, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் இன்று மக்களவையில், இக்கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்கு பதில் அளிக்கையில் கூறினார். நாட்டின் பருமநிலை பொருளாதாரக் கட்டமைப்பை அரசு நன்கு வலுப்படுத்தி இருப்பதால், நிதி உறுதிப்பாட்டு திட்டங்களில் இருந்து விலகாமல், பொருளாதார அதிர்ச்சிகளை தாங்கிக் கொள்ளும் சக்தி, நாட்டிற்கு கிடைத்து இருப்பதாக அவர் தெரிவித்தார். உலக அளவிலான எல்பிஜி மற்றும் இதர பொருட்களின் வினியோகச் சங்கிலியில் ஏற்படும் எந்தவொரு மாற்றத்தையும் எதிர்கொள்ள தயார் நிலையில் இந்தியா இருப்பதாகவும், மக்களுக்கு சிரமங்கள் ஏற்படுவதை தவிர்க்க, பிரதமர் திரு. நரேந்திர மோடி அயராது பாடுபட்டு வருவதாகவும், அவர் கூறினார்.

*மக்களவை 3* (4)

முன்னதாக, எல்பிஜி நிலவரம் உட்பட பல்வேறு பிரச்சனைனகள் குறித்து, மக்களவையில் எதிர்கட்சிகள் அமளி ஏற்படுத்தியதால், அவையின் அலுவல்கள், முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் மதியம் 2 மணி வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டன.

-----------------------------------

*திருநங்கை மசோதா* (3)

3ஆம் பாலினத்தவர் உரிமைப் பாதுகாப்பு தொடர்பான திருத்த மசோதா இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. மத்திய சமூக நீதித் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் இம்மசோதாவை அறிமுகப்படுத்தினார்.

-----------------------------------

*மாநிலங்களவை-கைத்தறி* (9)

உலகின் 95 சதவிகித கைத்தறி துணி ரகங்கள் இந்தியாவில்தான் தயாரிக்கப் படுவதாக, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங்

கூறியுள்ளார். இன்று மாநிலங்களவையில், துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், கைத்தறி துறையில் 70 சதவிகித அளவிற்கு, பெண் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார். சுயசார்பு இந்தியா மற்றும் உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் இயக்கத்தினால், கைத்தறி துறைக்கு கூடுதல் வலு கிடைத்து இருப்பதாகவும், இந்தியாவில் தயாராகும் கைத்தறி துணி ரகங்கள், நாட்டின் தனி அடையாளமாகவே மேம்பட்டு உள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

-----------------------------------

*ரயில்வே* (12)

ரயில்வே துறையில், 77 சதவிகித அளவிற்கு, நேரம் தவறாமை எட்டப் பட்டுள்ளதாகவும், 24 ரயில்வே கோட்டங்களில், நேரம் தவறாமை விகிதம் 90 சதவிகிதத்திற்கு மேல் பதிவாகி இருப்பதாகவும், ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். மதுரை, கோட்டா, ரத்லம், ஆஜ்மீர் உள்ளிட்ட ரயில்வே கோட்டங்களில், அதிகபட்ச அளவில் நேரம் தவறாமை எட்டப் பட்டுள்ளதாக, அவர் இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது கூறினார். ரயில்களின் இயக்கம் தொடர்பான கால அட்டவணையை, திறம்பட்டதாக மாற்ற, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பகுப்பாய்வு முறைகள் பயன்படுத்தப் படுவதாகவும், ஜப்பானிய முறையில், முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட கால அட்டவணை அடிப்படையில், ரயில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

-----------------------------------

*எல்பிஜி சந்திப்பு* (12)

வர்த்தக எல்பிஜி சிலிண்டர் வினியோக நிலவரங்களால், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து, மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் இன்று புதுடெல்லியில், பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரியை சந்தித்து பேசினார். வர்த்தகப் பயன்பாட்டாளர்களுக்கு, அவரவர் மாதாந்திர எல்பிஜி தேவையில் 20 சதவிகிதம், இன்று முதல் ஒதுக்கீடு செய்யப் படுவதாகவும், வினியோகத்தை அதிகரிக்க திட்டங்கள் தயாரிக்கப் படுவதாகவும், சமூக ஊடகத்தில் திரு. ஷெகாவத்

தெரிவித்துள்ளார். மத்திய அரசு, சுற்றுலாத் துறைக்கும், பெட்ரோலியத் துறைக்கும் இடையே ஒருங்கிணைப்பாக செயல்பட்டு, நிலவரங்களை கண்காணித்து வருவதாகவும், நுகர்வோர் நலன்களை முழுமையாக பாதுகாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

-----------------------------------

*எல் முருகன் (8)*

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், இன்று திருப்பதி வெங்கடேஸ்வரர் கோவிலில் தரிசனம் செய்தார். திருமலா-திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள், மத்திய அமைச்சரை வரவேற்று, சிறப்பு தரிசனத்திற்கு அழைத்துச் சென்றனர். பின்னர் ரங்கநாயகுல மண்டபத்தில், திருக்கோவில் பண்டிதர்கள், தீர்த்தப் பிரசாதம் கொடுத்து, அமைச்சரை ஆசீர்வதித்தனர். அமைச்சர் திரு. எல். முருகன் செய்தியாளர்களிடம் பேசுகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நாடு, பாதுகாப்பாகவும், வளமான முறையிலும் முன்னேறி வருவதாக கூறினார்.

-----------------------------------

*புதுச்சேரி உள்ளாட்சி 1 (12)*

புதுச்சேரியில் இதர பிற்பட்ட வகுப்பினருக்கு, உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் வழங்குவது குறித்து, அரசால் அமைக்கப்பட்ட ஒருநபர் ஆணையம், தனது பரிந்துரைகளை, அரசிடம் சமர்பித்துள்ளது. துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் முன்னிலையில், கடற்கரை சாலை மேரி கட்டிடத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆணையத்தின் தலைவர் நீதிபதி கே.கே. சசிதரன், பரிந்துரைகளை அரசிடம் வழங்கினார். ஆணையத்தின் 6 ஆயிரம் பக்க அறிக்கையை அரசு கவனமாக ஆராய்ந்து, அரசியல் சாசனப்படி, உரிய நடவடிக்கை எடுக்கும் என்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறினார். புதுச்சேரியில் உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்பை அரசு உருவாக்கி இருப்பதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ……

(வாய்ஸ்-ரங்கசாமி)

*புதுச்சேரி உள்ளாட்சி* 2 (5)

ஒருநபர் ஆணையம் அறிக்கை சமர்பித்த விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் திரு. ராஜவேலு, அரசுக் கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி மற்றும் தலைமைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

-----------------------------------

*ரங்கசாமி வாழ்த்து* (11)

தமிழக ஆளுநராக கூடுதல் பொறுப்பேற்றுள்ள திரு. ஆர்.வி. அர்லேக்கருக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். திரு. அர்லேக்கரின் சிறப்பான பொது சேவையும், நிர்வாக அனுபவமும், தமிழகத்தை, வளர்ச்சி, மற்றும், நல்லிணக்கத்தின் புதிய உயரங்களுக்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை என்று, வாழ்த்துச் செய்தியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

மேற்குவங்க ஆளுநராக பதவியேற்றுள்ள திரு. ஆர்.என். ரவிக்கும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். பொது வாழ்வு மற்றும் நிர்வாகத்தில், திரு. ஆர்.என். ரவிக்கு உள்ள வளமான அனுபவம், ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்துவதிலும், மேற்குவங்கத்தின் வளர்ச்சியை முன்னெத்துச் செல்வதிலும் முக்கிய பங்களிக்கும் என தாம் நம்புவதாக, அவர் கூறியுள்ளார்.

-----------------------------------

*காரைக்கால் கடலோரம்* (10)

காரைக்கால் மாவட்டத்தில் கடலோரப் பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்து, மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி, இன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். காவல் துறை, கடலோரப் பாதுகாப்புப் படை, மற்றும், மீன்வளத் துறை அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். கடலோரப் பகுதிகளில் ரோந்துப் பணிகளை தீவிரமாக்கவும், நவீன கண்காணிப்பு உபகரணங்களை பயன்படுத்தவும், சம்பந்தப்பட்ட துறைகளுக்கு இடையே, தகவல் பரிமாற்றத்தை

மேம்படுத்தவும் முடிவு எடுக்கப்பட்டது. கடல்வழி சட்ட விரோத செயல்பாடுகளை தடுப்பது குறித்து மீனவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

------------------------------------

*வானிலை* (7)

இன்று தென்தமிழக கடலோர மாவட்டங்களிலும், நாளை முதல 3 நாட்களுக்கு, ராமநாதபுரம்-தூத்துக்குடி மாவட்டங்களிலும், மிக லேசான மழை பெய்ய கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், கொடைக்கானலில் 9 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

------------------------------------

*சசிகலா* (5)

அஇஅதிமுகவின் முன்னாள் பொறுப்பு பொதுச் செயலர் திருமதி சசிகலா நடராஜன், அகில இந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற பெயரில், புதுக் கட்சி தொடக்கி உள்ளார். கட்சிக் கொடி, மற்றும், சின்னத்தையும், அவர் இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் அறிமுகப் படுத்தினார். தமது கட்சிக்கு தென்னந்தோப்பு சின்னம் ஒதுக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

------------------------------------

*போதை ஒழிப்பு* (9)

போதை மருந்துகளை ஒழிக்கத் தேவையான உளவுத் தகவல்களை பகிர்ந்து கொள்வது தொடர்பாக, இந்தியாவும், அமெரிக்காவும் பேச்சு வார்த்தை நடத்தி உள்ளன. ஆஸ்திரியாவின் வியன்னா நகரில், ஐநா போதை மருந்து ஆணையத்தின் 69ஆவது அமர்வுக்கு இடையே, தேசிய போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைமை இயக்குநர் திரு. அனுராக் கர்க், அமெரிக்காவின் போதை தடுப்பு கொள்கைத் துறை இயக்குநர் திருமதி சாரா காட்டரை சந்தித்து, இதுகுறித்து பேச்சு வார்த்தை நடத்தினார். போதை தடுப்பு குறித்த இருதரப்பு பணிக்குழுவின் பில்லர்-3

கூட்டத்தை, வரும் ஏப்ரல் மாதம் கூட்டவும், இந்த சந்திப்பின் போது ஒப்புக் கொள்ளப்பட்டது.

------------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அசாமில், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

நடப்பு நிதியாண்டிற்கான 2ஆம் தொகுப்பு துணை மானியக் கோரிக்கைகள் இன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டன.

எல்பிஜி வினியோக நிலவரங்களால், விருந்தோம்பல் துறையில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து, மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் இன்று, பெட்ரோலியத் துறை அமைச்சரை சந்தித்து பேசியுள்ளார்.

புதுச்சேரி உள்ளாட்சி அமைப்புகளில் ஓபிசி இடஒதுக்கீடு குறித்து, அரசால் அமைக்கப்பட்ட ஒருநபர் ஆணையம், தனது பரிந்துரைகளை, அரசிடம் சமர்பித்துள்ளது.